# அம்ருதபுரியில் தீபாவளி திருநாள்

# காசியைப் போன்றே லட்டுத் தேரில் சிவலிங்கம்

# 10 & 11, நவம்பர் 2015

செங்கல்பட்டிலிருந்து பறவைகள் சரணாலயமான வேடந்தாங்கல் செல்லும் வழியில் ஸ்ரீதாரா மாதா ஸமேத பகவான் ஸ்ரீமத் ஸ்வாமி ஸீதாராம ஸ்வாமிகளால் நிறுவப்பெற்றுள்ள திருத்தலம் ஸ்ரீஅம்ருதபுரி எனும் ஸ்ரீ இராமானுஜ யோகவனம். நகரேசு காஞ்சி மாநகர் அமையப்பெற்றுள்ள தொண்டை மண்டலத்திலுள்ள இத்திருத்தலத்தில், “சேரவாரும் ஜகத்தீரே” என்ற ஸ்ரீராமானுஜரின் சைவ, வைணவ ஒற்றுமையை பறைசாற்றும் சித்தாந்தப்படி, நல்லருள் புரியும் ஸ்ரீநவக்கிரஹ விநாயகர், ஸ்ரீயோக நரசிம்மர், ஸ்ரீமதுரவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீநிவாஸப் பெருமாள், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீசங்கட விமோசன சஞ்சீவி ஹனுமான் மற்றும் ஸ்ரீமந்த்ர ராஜ நாகபாச அம்ருதகலச கருட பகவான் ஆகிய தெய்வங்களும், பதினெண் சித்தர்களும் எழுந்தருளி இங்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் ஜாதி, மத, இன மற்றும் நிற வேறுபாடின்றி அருள்பாலித்து வருகின்றனர்.

புண்ணிய ஷேத்திரமாம் காசியில், ஒவ்வொரு தீபாவளித் திருநாளன்றும், லட்டுத் தேரில் மாதா அன்னபூரணியை சேவிப்பது மிகவும் விஷேமான ஒன்றாகும். இதற்காக பலரும் வருடந்தோறும் இங்கிருந்து காசி சென்று இந்த லட்டுத் தேர் வைபவத்தை நேரில் தரசித்து புண்ணியம் தேடி வருகின்றனர். ஆனால், நம்மில் பலரால் பொருளாதாரம் மற்றும் உடல்நிலை போன்ற காரணங்களினால் அவ்வாறு காசிக்கு சென்று லட்டுத் தேர் தரிசனம் பெற முடியாமல் வருந்துவதுண்டு.

பக்தர்களின் இந்த மன வருத்தத்தைப் போக்கும் விதமாக, ஸ்ரீஸீதாராம ஸ்வாமிகளின் திருவருளால் இந்த வருடம் தீபாவளித் திருநாளன்று, ஸ்ரீஅம்ருதபுரி அன்னபூர்ணாலயத்தில் ஸ்ரீஅன்னபூரணி முன்னிலையில் வெள்ளியிலான ஸ்ரீமகாதேவ சிவலிங்கம் லட்டுத் தேரில் எழுந்தருள உள்ளார்.

தீபாவளித் திருநாளில் இவ்வாறான லட்டுத் தேரில் சிவலிங்கத்தை சேவிப்பதனால், பக்தர்களின் உடற்பிணி, பசிப்பிணி மற்றும் சகல விதமான சனி தோஷங்களும் நீங்கப் பெறும் என்றும் ஸ்வாமிகள் அருள் வாக்கிட்டுள்ளார்கள்.

**பக்தர்களின் வசதிக்காக, இந்த அற்புதமான லட்டுத் தேர் வைபவம் தீபாவளித் திருநாளான நவம்பர் 10ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 8மணி முதல் மறுநாள் நவம்பர் 11ம் தேதி புதன்கிழமை மாலை 5 மணி வரை இரண்டு நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :- ஸ்ரீகார்யம், ஸ்ரீஅம்ருதபுரி இராமானுஜ யோகவனம், வையாவூர் கிராமம், வேடந்தாங்கல் (வழி). தொலைபேசி: 044-27565237.